1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் சொல்ல விரும்புவது Recruitment is different from placement வேலைக்கு எடுக்கிற பொழுதுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு. Placement—எங்கே அவர்களை வேலையில் அமர்த்த வேண்டுமென்பது அந்தந்த வேலையினுடைய நிமித்தங்களைப் பொறுத்தும், நிர்வாக நலனை ஒட்டியும் வருகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களோ. பிற்படுத்தப்பட்டவர்களோ நியமிக்கப்படுகிறார்கள் என்றால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற காரணத்தினாலே அல்ல. நிர்வாக நலனை ஒட்டி நியமிக்கப்படுவதனால் இன்சிடென்டலாக அது வருகிறது. அப்படித்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் போடப்படுகிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது நன்மையோடுதான் நடந்து கொள்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குரூப்—1லேயிருந்து இந்திய ஆட்சிப் பணித்துறைக்கு சிபார்சு செய்கின்றபொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு எதுவும் பரிசீலிக்கப்படுகிறதா? ஆம் என்றால் விவரம் சொல்ல அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லத் தடை.

62—(*வினா எண் 13351)—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருந்து அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வது தற்சமயம் தடை செய்யப்படுவதில்லை. தேவை ஏற்படின் அரசு ஆவன செய்யும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி ஆலைகளில் செய்கின்ற குருணைகளை 3 மாதங்களுக்கு ஒரு முறை மண்டலங்களில் எல்லாம் டெண்டர் விடும்போது, பெரும்பாலான மண்டலங்களிலே வெளி மாநிலங்களிலே உள்ளவர்கள் அதிலே கலந்துகொண்டு, குருணைகளை டெண்டர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மூலம் எடுக்கிறார்கள். அந்த டெண்டர் மூலம் எடுத்த குருணைகளை மிகவும் எளிதாக மாநிலத்திற்கு வெளியே கொண்டு சென்று விடுகிறார்கள். ஆனால், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் குருணைகளை எடுத்துச் செல்வது என்றால், அவற்றை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல முடிவது இல்லை. ஆகவே, அந்தக் குருணையை மிகக் குறைந்த விலையிலே தமிழகத்திலே விற்பனை செய்ய ஏதுவாக, குருணையை வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதைத் தடை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை மையமாகக் கொண்டு, இப்பொழுது அரிசியே எடுத்துக் செல்லக் கூடாது என்ற விதி இருக்கிறது. அதை மாற்றி— அரிசி என்றால் குருணையும் அதில் சேர்ந்து அடங்கும் என்கின்ற வகையில் திருத்தம் கொண்டு வந்து அரசு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போல மத்திய சர்க்காருக்குச் சொந்தமான உணவுக் கழகத்தின் அரிசி ஆலைகளிலிருந்து ஏலம் விடப்படும் நெல் மற்றும் குருணைகளைக் கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பர்மிட் மூலம்தான் எடுத்துச் செல்ல முடியும். ஆனால், தமிழ் நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஆலைகளிலிருந்து குருணைகளை எவ்வித பர்மிட்டுமில்லாமல் வெளி மாநிலங்களுக்கு எளிதாகக் கொண்டு செல்ல முடிகிறது. ஆகவே, அதனையும் தடை செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டேன். 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையா வியாபாரப் பொருள்கள் ஆணை நெல், அரிசி சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு ஆணையாகும். இவ்வாணையின் கீழ் அரிசி என்ற சொல் வரையறை செய்யப்படவில்லை. அரிசி என்ற சொல் வரையறை செய்யப்பட்டு குருணையும் இவ்வரையறைக்குள் அடங்கும் என திருத்தம் செய்து, அரசு தற்போது திருத்தம் வெளியிட்டுள்ளது. எனவே, அரிசிக்கு என்ன என்ன விதிமுறைகள் பொருந்துமோ அது குருணைக்கும் இனி பொருந்தும்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி, குருணை அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப் படுவது பற்றிதான் மூலக்கேள்வி. ஆனால் குருணை என்ற பெயரால் முழு அரிசியையே அண்டை மாநிலங்களுக்குக் கடத்துகிறார்களே, அதை அரசு அறியுமா? ஆகவே, அரிசி குருணை என்றால், அரிசியைத்தான் கடத்துகிறார்கள்— குருணை என்ற பெயரால் அரிசியைத்தான் கடத்துகிறார்கள். ஆகவே, அதைத் தடை செய்ய அரசு உடனடியாக முன் வருமா என அறிய விரும்புகிறேன்

1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு அறிந்த காரணத்தால்தான் இந்த ஆணையில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமை பெற்ற பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ் நாட்டுக்கு அரிசியையோ அல்லது நெல்லையோ கொண்டு வருவதற்கு லெவி போடுகிறார்கள். அதை எடுப்பதற்கு அரசு முன் வருமா ? செஸ் போடுகிறார்கள். அதையும் எடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய வாய்ப்பு எதுவும் இல்லை. இருந்தாலும் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தையும் சென்னை மாவட்டத்தையும் இணைத்து ஒரே மண்டலமாக்கி செங்கல்பட்டிலிருந்து அரிசியை சென்னைக்குக் கொண்டு வருவதைப் போல, அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்கிற ஒரு உத்தரவை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்காது.

திருச்சியில் பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம்.

63—(*வினா எண். 5144)—திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாநகரில் 13 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம் தற்பொழுது என்ன நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் துவக்கப்பட்டபொழுது எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது?

(இ) திருத்திய மதிப்பீட்டின்படி செலவு எவ்வளவு ஆயிற்று?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சி பாதாள சாக்கடைத் திட்டம் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் நிலை ஆகியவை தற்பொழுது முடிவடையும் நிலையிலுள்ளது.

(ஆ) மற்றும், (இ): திருச்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் துவக்கப்பட்டபோது ரூ. 285.06 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி இத்திட்டத்திற்கு